**ஆண்கள் ஐக்கிய ஞாயிறு**
**15.06.2014**
**வேதவினா - II சாமுவேலின் புத்தகம்**

மொத்த மதிப்பெண் : 50
நேரம் : 1 மணி

**I. ஒரு வார்த்தையில் பதில் எழுதுக நான்/நாங்கள் யார் :** (5)

1. எப்படியானாலும் நான் ஓடுவேன் என்று ஓடி முந்திக்கொண்டவன்

2. வெளியிலிருக்கிற கலைமான்களில் ஒன்றைப்போல வேகமாய் ஓடுகிறவன் நான்

3. கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப் பார்க்கிலும் பலமுள்ளவர்களாயிருந்தவர்கள்

4. செத்த நாயைப் போலிருக்கிற என்னை நீர் நோக்கிப் பார்க்கிறதற்கு உமது அடியேன் எம்மாத்திரம்

5. நான் இன்னும் பலவீனன். செருயாவின் குமாரராகிய இந்த மனுஷர் என் பலத்துக்கு மிஞ்சினவர்களாயிருக்கிறார்கள்

**II. தாவீது ராஜாவைத் திருத்துவதற்காக இரண்டு முறை கதை சொல்லப்பட்டது.**
**a) அதை சொன்னவர் யார் b) அதை சொல்வதற்கு காரணமாயிருந்தவர்கள் யார் ?**
**c) கதையின் மூலமாக தாவீதின் வாழ்வில் நடந்த பின் விளைவுகள் என்ன?**
**(ஏதாவது ஒரு கதை ) (5)**

III. **யார் யாரிடம் எப்போது கூறியது**:- {ஏதாவது ஐந்து (5)} (10)

1. தங்கள் பிராணனை எண்ணாமல் போய் வந்த மனுஷரின் இரத்தத்தைக் குடிக்கும் இந்தச் செயல் எனக்குத் தூரமாயிருப்பதாக.

2. தைரியமாயிரு, நம்முடைய ஜனத்திற்காகவும் நம்முடைய தேவனுடைய பட்டணங்களுக்காகவும் சவுரியத்தைக் காட்டுவோம். கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக.

3. உன் இரத்தப்பழி உன் தலையின்மேல் இருப்பதாக. கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரை நான் கொன்று போட்டேன் என்று உன் வாயே உனக்கு விரோதமாக சாட்சி சொல்லிற்று.

4. நீர் போய் உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும், கர்த்தர் உம்மோடு இருக்கிராரே

5. அந்த செத்த நாய் ராஜாவாகிய என் ஆண்டவனை தூஷிப்பானேன். நான் போய் அவன் தலையை வாங்கிப் போடட்டுமே

6. அந்த பிள்ளையாண்டானுக்கு நடந்தது போல, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களுக்கும், பொல்லாப்புச் செய்ய உனக்கு விரோதமாய் எழும்புகிற யாவருக்கும் நடக்ககடவது

IV. II சாமுவேலில் உள்ள நபர்கள் மூலமாக நாம் கண்டு கொண்ட நல்ல குணாதிசயங்கள் என்ன ? (ஏதாவது ஐந்து ) (10)

1.

2

3.

4.

5.

V. II சாமுவேலில் 22 ம் அதிகரத்தில் வருகிற வசனங்கள் 1) எந்த சங்கீதத்தில் வருகிறது 2) இந்த வசனங்களில் தாவீதின் வாழ்க்கையில் நடந்த/நிறைவேறின ஏதாவது இரண்டு வசனத்தை விளக்குக (5)

1.

2

3.

VI தாவீது ராஜாவினால் ஏறெடுக்கப்பட்ட ஜெபம் எப்படி நிறைவேறியது/அதன் விளைவுகள் என்ன ? (10)

a) கர்த்தாவே அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பைத்தியமாக்கிவிடுவீராக

b) கர்த்தராகிய ஆண்டவரே தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம் என் வீடும் எம்மாத்திரம்.

c) ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிகட்டுவார்

d) இதோ நான் தான் பாவஞ்செய்தேன், நான் தான் அக்கிரமம் பண்ணினேன். இந்த ஆடுகள் என்ன செய்தது. உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக.

e) தாவீது அந்த பிள்ளைக்காகத் தேவனிடத்தில் பிராத்தனை பண்ணி உபவாசித்து, உள்ளேபோய் இராமுழுவதும் தரையிலே கிடந்தான்

VII பொருத்துக : (5)

| | | |
|---|---|---|
| i) | தாவீதின் இராணுவத்தலைவன் | a) யோனதாப் |
| ii) | தாவீதின் மந்திரி | b) செராயா |
| iii) | தாவீதின் சம்பிரதி | c) ஊசாய் |
| iv) | தாவீதின் ஆலோசனைக்காரன் | d) யோவாப் |
| v) | தாவீதின் சிநெகிதன் | e) யோசபாத் |
| | | f) அகித்தோப்பேல் |